டிரினிடி மகளிர் கல்லூரி, நாமக்கல் - 637002.

தமிழ்த்துறை

நாட்டுப்புறவியல் : 19UTAA06

# தலைப்பு : நாட்டுப்புற இலக்கியத்தின் வகைப்பாடுகள்


தயாரிப்பு:

முனைவர் தா.க. அனுராதா,

உதவிப்பேராசிரியர் & தமிழ்த்துறைத் தலைவர் (முதுகலை)

http://www.trinitycollegenkl.edu.in/

# நாட்டுப்புற இயல் - விளக்கம்

நாட்டுப்புற மக்களின் கலைகளையும் இலக்கியங்களையும் நம்பிக்கைகளையும் பற்றி
அறிந்து கொள்ளும் இயலே நாட்டுப்புற இயலாகும்.

## மேல்நாட்டு அறிஞர்களின் கருத்துக்கள்:

**ஜேக்கப் கிரீம்**

நாட்டுப்புறவியலின் தந்தை என அழைக்கப்படுபவர். வாய்மொழி இலக்கியத்தின் தோற்றம் வளர்ச்சி பற்றி ஜெர்மன் புராணவியல் என்ற நூலில் விரிவாகக் கூறியுள்ளார்.

**ஜான் எல்.மிஷ்:**

கல்லாத மக்களிடையே எஞ்சியுள்ள நம்பிக்கைகள், மரபுகள், புராணங்கள், மூடநம்பிக்கைகள், கலைகள், சடங்குகள் முதலியவற்றைப் பற்றி ஆராயும் இயலே நாட்டுப்புறவியல் என்கிறார்.

# நாட்டுப்புற இலக்கியத்தின் வகைப்பாடுகள்

## நாட்டுப்புறப் பாடல்கள்

நாட்டுப்புற மக்களால் பாடப்படும் பாடல்கள் நாட்டுப்புறப் பாடல்களாகும். நாட்டுப்புறப்பாடல்கள் எளியவை - பகட்டில்லாதவை – பொய்க்கலப்பற்றவை - இனிமையும் இசைப்பொலிவும் நிறைந்தவை.

## நாட்டுப்புறக் கதைகள்

கிராம மக்கள் தங்கள் கருத்தை வலியுறுத்தவும் பொழுதுபோக்கும் பொழுதும் கதைகள் சொல்வதுண்டு புராணமும், இதிகாசமும், இலக்கியமும் இதற்கு உதவுகின்றன.

## நாட்டுப்புற ஆடல்கள்

கிராம மக்கள் உற்சாகமும், உவகையும் பெற வேண்டுமென்பதற்காக நிகழ்ந்தப்படுவன நாட்டுப்புற ஆடல்களாகும்.

## நாட்டுப்புற கூத்துகள்

கதையோடு சேர்ந்த ஆடல்கள் கூத்தாகின்றன கூத்துகள் திறந்த வெளியில் மேடையின்றி, திரைகளின்றி, அதிக ஒப்பனையின்றி நடத்தப்படுவனவாகும்.

## பழமொழிகள்

பழமையான மொழிகளே பழமொழிகள் இவற்றைச் சொல்அடை, முதுமொழி, முதுசொல், பழஞ்சொல் என்றும் அழைப்பர்.

## விடுகதைகள்

நாட்டுப்புற மக்களின் புத்திசாலித்தனத்தின் வெளிப்பாடே விடுகதைகள் ஆகும். இதனை ‘புதிர்’ என்றும் அழைப்பர். ‘பிசி’ என்பர் தொல்காப்பியர்.

## கதைப்பாடல்கள்

கதைகளைப் பாடல் முறையில் சொல்வதே கதைப்பாடல்கள் ஆகும்.

## நாட்டுப்புற விளையாட்டுகள்

விளையாட்டுகள் மன மகிழ்ச்சிக்கும் உடல் வளர்ச்சிக்கும் உதவுபவை. குழந்தை விளையாட்டு, சிறுவர் விளையாட்டு, இளைஞர் விளையாட்டு என விளையாட்டை பலவகையாகப் பகுப்பர்.

## நாட்டுப்புற நம்பிக்கைகளும், பழக்கவழக்கங்களும்

நம்பிக்கையை மனிதனின் மூன்றாவது கை என்பார்கள். மனிதனது பிறப்பு முதல் இறப்பு வரை மாத வழியாக நம்பிக்கைகள் தொடர்கின்றன.

பழகிக் கொள்வது பழக்கமென்றால் வழங்கிவருவது வழக்கமாகும். மனிதனது பழக்கவழக்கங்கள அவன் பிறந்த மண், சாதி, சமயம் ஆகியவற்றிற்கேற்ப மாறுபடுகின்றன.

## நாட்டுப்புறச் சடங்குகள்

தொடர்ந்து மக்களால் கைக்கொள்ளப்படுபவை சடங்குகள் ஆகும். மனிதனின் பிறப்பு, இறப்பு, திருமணம், வழிபாடு என அனைத்தும் சடங்குகள் நிறைந்து காணப்படுகின்றன. சடங்குகள் சமயத்தின் அடிப்படை எனலாம்.

நன்றி

http://www.trinitycollegenkl.edu.in/